# தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை வரலாறு

## The Life Of Prophet William Branham

## பாகம் – 1



வில்லியம் மரியன் பிரன்ஹாம்


போதகர் A. சாமுவேல்

**Pastor A. Samuel**

# முன்னுரை

தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கையைக் குறித்து நாம் கற்றுக் கொள்வோமானால், இந்தக் கடைசி கால செய்தியை நன்கு அறிந்து கொள்ள அது ஏதுவாயிருக்கும். எனவே தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாற்றை நான் சொல்ல விரும்புகிறேன், அதை நாம் எல்லோரும் ஓரளவுக்கு கேள்விப்பட்டு இருக்கிறோம், தீர்க்கதரிசியின் வாழ்க்கை ஓரளவுக்கு நமக்குத் தெரியும், ஆனால் அதை வரிசைக்கிரமமாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு வேளை அதற்கு முப்பது பிரசங்கமாவது தேவைப்படலாம். அதற்குள்ளாக கர்த்தருடைய வருகைகூட வந்து விடலாம். உங்களுக்கு ஒரே நாளில் எல்லா வற்றையும் சொல்லி விட முடியாது. கொஞ்ச கொஞ்சமாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், முதலாம் அதிகாரம் 5–ம் வசனத்தை வாசிக்கலாம்:

**நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளை யிட்டேன் என்று சொன்னார்.**

எரேமியாவை தேவன் ஜாதிகளுக்குத் தீர்க்கதிரிசியாகக் கட்டளையிட்டதாக இங்கு சொல்லப்படுகிறது. தாயின் கற்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே அவனைப் பரிசுத்தம்பண்ணி ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாய் கட்டளையிட்டார்.

அதைப் போல சகோ.பிரன்ஹாம் புறஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாய் இருக்கி றார். இருபதாம் நூற்றாண்டில் புறஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாய் தேவன் அவரை ஏற்படுத்தினார். தாயின் கற்பத்தில் உருவாவதற்கு முன்னதாகவே தேவன் அவரை தெரிந்துகொண்டு, பாவத்தில் விழாதபடி ஆண்டவர் அவரை பரிசுத்தப்படுத்தி அவரை தீர்க்கதரிசியாய் முன்குறித்திருந்தார்.


நாம் கடைசி காலத்தில் ஜீவிக்கிறோம். புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஜீவிக்கிறோம். கர்த்தருடைய வருகையின் நாளில் ஜீவித்துக் கொண்டு இருக்கிறோம். இந்தக் காலத்திலேயும் ஆண்டவர் ஒரு தீர்க்கதரிசியைக் கட்டளை யிட்டார். எரேமியாவினுடைய முக்கியமான தீர்க்கதரிசனம் தானியேலின் எழுபது வாரங்கள் ஆகும். எரேமியா தான் அதை சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எழுபது வருஷம் பாபிலோனில் இருப்பார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தான். அதைப்போல ஏழு சபைக்காலங்களும் ஏழு முத்திரைகளும் தேவன் சகோ.பிரன்ஹாம் மூலமாக உரைத்த பிரதானமான செய்தி. தீர்க்கதரிசி சகோ.பிரன்ஹாமின் பிறப்பிலிருந்து 1965–ம் வருஷம் வரை சம்பவித்த காரியங்களை நாம் விரிவாகப் பார்க்கப் போகிறோம். இப்பொழுது அவருடைய பிறப்பிலிருந்து சொல்ல விரும்புகிறேன்.

# சகோ.பிரன்ஹாமின் பிறப்பு

“15 வயதில் குழந்தை பெற்றுக்கொள்வதென்பது, அது மிகவும் இளமை பருவமல்லவா?” என்று தனக்குத்தானே வாய்க்குள் முணுமுணுத்தாள் எல்லா பிரன்ஹாம் (Ella Branham). அப்படியிருந்தும், “ஏன், நான் குழந்தை பெற்றுக் கொள்ள ஆயத்தமாகத் தானே இருக்கிறேன்” என்று தன்னைத்தானே உற்சாகப் படுத்திக் கொண்டாள்.

பிரன்ஹாமின் தாயார் பெயர் தான் எல்லா பிரன்ஹாம். அவளுக்கு அப்போது 15 வயது. அவளுக்கு பிரசவ வேதனை முன்பை விட அதிகமாகிக் கொண்டே வந்தது. அவள் பீதியால் நிறைந்து அமைதியற்ற நிலையில் காணப்பட்டாள். அவள் தன்னுடைய புடைத்த வயிற்றைப் பிடித்துக் கொண்டு, “வேண்டாம், தயவு செய்து இப்பொழுது வேண்டாம், சார்லஸ் வீட்டிற்கு வரும்வரை வேண்டாம்” என்று வேதனையில் புலம்பினாள். அவளுடைய புருஷனுடைய பெயர் தான் சார்லஸ் பிரன்ஹாம் (Charles Branham).

அவள் கடுமையாக வேலை செய்வதனால் அவளுடைய நெற்றியில் வியர்வைத் துளி வடிந்து கொண்டிருந்தது. அவள் தள்ளாடியபடி அந்த மரக்கொட்டிலில் இருந்த ஒரே ஜன்னலின் அருகில் வந்தாள். அந்த ஜன்னலுக்குக் கண்ணாடி கிடையாது. அது கரடுமுரடான ஒரு மரக்கதவின் நடுவில் பொருத்தப்பட்டிருந்தது. அதற்கு மரத்தினாலான ஒரு அடைப்புப் பலகை இருந்தது. எல்லா, அதை பகல் நேரத்தில் திறந்து வைத்துக் கொண்டு இரவு நேரத்தில் அடைத்து விடுவாள். இப்பொழுது அது திறந்திருந்தது.



அவள், “சார்லஸ்” என்று உரக்கக் கத்தினாள். அவளுடைய சத்தமானது பரந்து அகன்ற குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த கென்டக்கி (Kentucky) காட்டுப்பகுதிக்குள் சென்று மறைந்தது. அவளுடைய அண்டை வீட்டார் பல மைல்கள் தூரம் தள்ளியே இருக்கிறார்கள் என்பதை அவள் அறிந்திருந்தாள். அவள்

மிகவும் தனிமையான சூழ்நிலையில் இருந்தாள். பிரசவ வேதனையானது அவளை நம்பிக்கையற்ற நிலைக்குள் தள்ளியது. "சார்லஸ்" என்று மீண்டும் கத்தினாள். "சார்லஸ், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" பின்பு அவள் தாழ்ந்த குரலில், "தயவு செய்து வீட்டிற்கு வாருங்கள்" என்று கூப்பிட்டவாறே தேம்பி அழுதாள். அந்த சத்தம் காற்றில் கரைந்து போனதே ஒழிய சார்லஸ் காதில் விழவில்லை.

சார்லஸ் மிக தூரத்தில் இருக்கிறான். சார்லஸ் மரம் வெட்டுகிற வேலை செய்கிறான். அன்றைக்கு காலையில் தான் அவனுக்கு சம்பளம் கிடைத்திருக்கிறது. சம்பளம் கிடைத்த உடனே, பிறக்கப்போகும் தன்னுடைய முதல் குழந்தைக்கு ஒரு ஜோடி மேலாடையை வாங்கி வரும்படி கென்டக்கியில் உள்ள பர்கஸ்வில் என்ற இடத்திற்குப் போயிருக்கிறான். காலையில் சம்பளத்தை வாங்கிவிட்டு அங்கே போனவன் மாலை ஆன பிறகும் வீடு திரும்பவில்லை. எந்த நேரமும் தன்னுடைய மகன் பிறக்கலாம் என்பதை அவன் அறிவான். பொழுது அங்கே போகப் போகிறது. இருட்டாகிற வேளையிலே, "சார்லஸ்" என்று வேதனையில் கூப்பிடும் பொழுது, பிரசவ வேதனையில் அலறும் பொழுது, அது சார்லஸ் காதில் விழவில்லை.

எல்லா, மிகவும் சோர்ந்துபோய், இளந்தளிர்விட ஆரம்பித்திருந்த மேப்பிள் மற்றும் ஓக் மரங்களின் பின்னால் சூரியன் மறைவதை பார்த்துக் கொண்டிருந்தாள். அது 1909–ம் வருஷம் ஏப்ரல் மாதமாக இருந்தது. எல்லா, குளிரால் நடுங்கியபடியே அடைப்புப் பலகையை மூடினாள்.

இப்பொழுது அந்த மரக்கொட்டிலில் உள்ள கடினமான பலகைகளுக்கிடையே உள்ள நீண்ட சிறிய துவாரம் வழியாகத்தான் மறைந்து கொண்டிருக்கும் சூரியனின் வெளிச்சம் உள்ளே வந்தது. இரம்பத்தால் அறுக்கப்பட்ட மரப்பலகைகளைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு மேசையும், உட்காருவதற்காக ஒரு பெஞ்சும் அங்கேயிருந்தது. மேலும் 12 அடி நீளமுள்ள அறையில் பழம்பாணியிலான ஒரு படுக்கையானது (bed) ஒரு பக்க சுவரோடு ஆணியடித்து பொருத்தப்பட்டிருந்தது.

எல்லா, தள்ளாடியபடியே படுக்கையருகில் வந்து, வைக்கோலினால் செய்யப்பட்ட அதன் மேல் சோர்வினால் தொப்பென்று உட்கார்ந்தாள். படுக்கை விரிப்பை இழுத்து படுத்துக் கொண்டாள். அவள் ஒவ்வொரு தடவை அசையும் போதும் தானிய உமியினால் செய்யப்பட்ட அந்த தலையணையானது *சட சட* என்று ஒலியெழுப்பியது.

அந்த அறையானது இருள் சூழ ஆரம்பிக்கையில், பாரிஸ், டெக்ஸாஸில் (Paris, Texas), அவள் திருமணத்திற்கு முன் வசித்து வந்த வீட்டைக் குறித்து எண்ணிப் பார்த்தாள். அதை ஒப்பிட்டுப் பார்த்த போது, திருமணம் ஆன புதிதில் இவ்வீடு அவளுக்கு தாங்கக் கூடாத அளவு அசௌகரியமாயிருந்தது. ஆனால் இப்போது பழகி விட்டது.

அவள் டெக்ஸாஸில் எல்லா ஹார்வே (Ella Harvey) என்ற பெயரில் வளர்ந்தாள். அவளுடைய தகப்பனார் வேட்டையாடுபவராகவும், விலங்குகளைப் பிடிக்க கண்ணி வைப்பவராகவும், பள்ளி ஆசிரியராகவும் இருந்தார். அவளுடைய தாய் செரோக்கி இந்திய (Cherokee Indian) பெண்ணாவாள். நான்கு பிள்ளைகளில் எல்லா தான் மூத்தவள். தோலில் சிவப்பு புள்ளிகளை உண்டாக்கும் தொற்று நோயின் காரணமாக, மூன்று வருடங்களுக்கு முன்பு தன்னுடைய தாய் மரிப்பது வரை அவளுடைய ஜீவியம் கவலையற்றதாகவும் நன்றாகவும் இருந்தது. அச்சமயத்தில் எல்லாவுக்கு 12 வயது மாத்திரமே. அவளுடைய இளைய சகோதரனுக்கு நான்கு வயது தான். ஒரு தாய் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் எல்லா செய்ய வேண்டியதாயிற்று.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, அவள் சார்லஸ் பிரன்ஹாமை குதிரை சவாரி செய்யும் போட்டி ஒன்றில் சந்தித்தாள். சார்லஸ் சுருள் முடியும் அகன்ற தோள்களும் கொண்டு, குட்டையாகவும் அழகான தோற்றமுடையவனாகவும் இருந்தான. எந்த குதிரையையும் அவன் அடக்கும் ஆற்றலைப் பெற்றவன். அவன் தோற்றதேயில்லை. ஆனால் எல்லா, தன்னுடைய அழகால் அவனை தோற்கடித்து விட்டாள். அப்போது சார்லஸிற்கு 18 வயதும் அவளுக்கு 14 வயதும் தான். அச்சமயத்தில் தன்னுடைய இளைய சகோதர சகோதரிகளை கவனித்துக் கொள்வதை தவிர்க்கும் படியான நல்ல வழியாக திருமணமானது அவளுக்குத் தோன்றியது. ஆனால் இப்பொழுதோ ஒரு சூடான பாத்திரத்திலிருந்து தப்பிப்பதற்காக இன்னொரு சூடான வாணலிக்குள் குதித்து விட்டோமோ என்று அவள் வியப்படைந்தாள். இங்கேயோ அவள் 15 வயதுடையவளாய், பழக்கமற்ற கென்டக்கி மலைகளில், ஒரு குழந்தையை வயிற்றில் சுமந்தவளாய், அந்த வீட்டிலிருந்து 40 மைல் தூரத்தில் மருத்துவரை உடையவளாய், உதவிக்கு அழைக்க ஒரு நண்பர் கூட இல்லாதவளாய் இருந்தாள். அவளுடைய தலையை தலையணையில் வைத்துக் கொண்டு அவள் அழுது கொண்டிருந்தாள்.

இருளாகத் தொடங்கி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சார்லஸ் பிரன்ஹாம் வீடு திரும்பனான். அவன் நிச்சயமாக குடித்திருந்தான், ஆனால் அவனுடைய சுய நினைவை இழக்கும் அளவுக்கு குடித்திருக்கவில்லை. அவன் மெல்ல வந்து கதவை சப்தமின்றி திறந்தான், அப்போது தான் அவனுடைய மனைவி தூங்கிக் கொண்டிருந்தால், அவளை அது தொந்தரவு செய்யாது. அப்போது அவன் அவளுடைய முனகல் சத்தத்தைக் கேட்டான். சார்லஸ் துரிதமாக தேவதாரு மரச் சுள்ளியில் விளக்கேற்றி, அதை பழ ஜாடியின் மூடியில் வைத்தான். அந்த தேவதாரு மரக் கணுவானது மங்கலாக எரிந்து, அதிலிருந்து புகை கிளம்பியது. அந்த மரக் கொட்டிலானது காற்றோட்டம் உள்ளதாய் அமைக்கப்பட்டிருந்ததால், புகையானது அந்த மரப் பலகைகளின் இடையே உள்ள பிளவுகள் வழியாக போனது. எல்லா, பலவீனமாக தாழ்ந்த குரலில், “சார்லஸ், அது இன்றிரவு தான். உங்களுடைய அம்மாவை அழைத்து வாருங்கள்” என்றாள்.

சார்லஸ் நெருப்பு மூட்டி விட்டு, தன்னுடைய தாயினுடைய மரக்கொட்டிலுக்கு விரைந்தான். அந்த இரவு நேரமானது குளிர் நிறைந்ததாயும், தெளிவான இரவாயும், பாதையை எளிதாக கடக்கும்படி நட்சத்திரங்களின் வெளிச்சத்தைக் கொண்ட தாகவும் இருந்தது. ஒரு மணி நேரம் கழித்து, தன்னுடைய தாயோடும் அண்டை வீட்டு பெண்கள் இரண்டு பேரோடும் அவன் திரும்பி வந்தான்.

மூதாட்டி பிரன்ஹாம் பன்றி இறைச்சியின் மேல்தோலின் கெட்டியைப் போல மிகவும் துணிச்சலுள்ள, சிடுசிடுப்பான வயதான பெண்மணியாவாள். ஆனால் பிரசவ வேதனையில் இருக்கும் இந்த 15 வயதான சிறு பெண்ணோ அமெரிக்க கூன் விலங்கின் கொழுப்பைப் போல சாதுவானவள். அந்த பாட்டி பிரன்ஹாம் ஒருபோதும் காலணிகள் அணிந்ததே கிடையாது. அவளுடைய வாழ்நாளில் அவளுக்குச் சொந்தமாக ஒரு ஜோடி காலணிகள் இருந்ததே இல்லை. இப்பொழுது அவள் சூழ்நிலையைக் கட்டுக்குள் எடுத்துக் கொண்டாள். அவளுக்கு 17 பிள்ளைகள் இருந்தனர். எனவே அவள் தன்னுடைய மருமகளுக்கு ஒரு நல்ல பேறு கால மருத்துவச்சியாக இருக்கப் போகிறாள். சார்லஸை வெளியே காத்திருக்கும்படி அவள் கட்டாயப்படுத்தினாள். அவன் அதற்காக அவளிடம் வாக்குவாதம் செய்யவில்லை. அவன் ஒரு கம்பளத்தை எடுத்துக்கொண்டு, மெல்ல நடந்து அந்த மரக்கொட்டிலின் ஒரு பக்கத்தில் ஆணியடித்து பொருத்தப்பட்டிருந்த சிறு மரக்கட்டைகளின் மேல் தன்னுடைய படுக்கையை போட்டுக் கொண்டான். அவன் தன்னுடைய உணர்ச்சி களைக் கட்டுப்படுத்த, தன்னுடைய பாக்கெட்டிலிருந்து விஸ்கி பாட்டிலை எடுத்து அதை முழுவதுமாக குடித்துத் தீர்த்தான். சிறிது நேரத்தில் அவன் ஆழ்ந்த தூக்கத்திலாழ்ந்தான்.

விடியற்காலம் நெருங்குகையில், மரக்கொட்டிலின் உள்ளேயிருந்து வந்த சந்தடி அதிகரித்தவண்ணம் இருந்தது. சார்லஸ் மிகுதியாக குடித்து வெறித்திருந்தான். விடியற்காலம் நெருங்கினபடியால், கிழக்கிலே அடிவானம் வெளுக்க ஆரம்பித் திருந்தது. ஆனால் இன்னும் சூரியன் உதிக்கவில்லை. அவன் தனக்குத்தானே சபித்துக்கொண்டு, பின் கவலையில் ஆழ்ந்தான். ஏனெனில் அவனுடைய குழந்தை இன்னும் பிறக்கவில்லை. ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டதா? ஒருவேளை உள்ளே சென்று பார்க்க வேண்டுமா? அவன் தன்னுடைய சிந்தையை சரிசெய்வதற்கு முன்பதாக, குழந்தை வீறிட்டு அழும் சத்தம் கேட்டது. அண்டை வீட்டு பெண்மணி ஒருத்தி மரக்கொட்டிலின் கதவைத் திறந்து வெளியே வந்து, “சார்லஸ் பிரன்ஹாம், அது ஆண் குழந்தை” என்றாள்.

சார்லஸ் உள்ளே சென்று கதவை அடைத்தான். மேசையில் வைக்கப்பட்டிருந்த கொழுப்பினால் செய்யப்பட்டிருந்த மெழுகுவர்த்தியிலிருந்து வந்த புகையினால் உண்டான வாடையால் அந்த அறை நிரம்பியிருந்தது. பாட்டி பிரன்ஹாம் குழந்தையை சுத்தம் செய்து முடித்தாள். பின் அவனை எடைபார்த்து 5 பவுண்டு என கண்டாள். பிறகு குழந்தையை மெல்ல அதனுடைய தாயின் கரங்களில்

கொடுத்தாள். சார்லஸ் தன்னுடைய மகனுக்காக தான் வாங்கியிருந்த குழந்தைக்கான மேலாடையை தன்னுடைய கைகளில் வைத்தவாறே அந்த குழந்தையைக் கவனித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

எல்லா, “சார்லஸ், உங்களுடைய நீல நிற கண்களைப் போல அவனுக்கும் உள்ளது” என்றாள்.

சார்லஸ் அந்த சிறு கண்களைக் கூர்ந்து கவனித்தான். ஆனால் அந்த மங்கிய வெளிச்சத்தில் சரியாக அந்த நிறத்தைப் பார்க்க முடியவில்லை. “அவனுடைய முதல் பெயராக *வில்லியம்* என்று அவனை அழைப்போம், அவனுடைய நடுப்பெயர் *மரியன்* என்பதாக இருக்கும்” என்று அவன் கூறினான். எல்லா, “வில்லியம்... மரியன்... பிரன்ஹாம் (William Marrion Branham)” என உச்சரித்துப் பார்த்தாள். “அவனை பில்லி (Billy) என்று சுருக்கமாக அழைக்கலாம். சார்லஸ், பில்லிக்கு உம்மைப் போன்ற சுருள் முடியும் இருக்கப் போகிறது என்று நினைக்கி றேன். அந்த அடைப்புப் பலகையைத் திறவுங்கள், அப்போது தான் அவனை நன்றாகப் பார்க்க முடியும்” என்றாள்.

அது 1909 –ம் வருடம் ஏப்ரல் மாதம் 6–ம் தேதி, செவ்வாய்க் கிழமை காலை சுமார் 5 மணியாக இருந்தது. சூரியன் இன்னும் உதித்திருக்கவில்லை. சார்லஸ் ஜன்னலில் இருந்த அடைப்புப் பலகையை திறந்த போது, அதிர்ச்சியினால் பின்னிட்டுத் திரும்பினான். சுமார் ஒரு அடி விட்டத்தில் நட்சத்திரம் போன்ற ஒரு வெளிச்சம் ஜன்னல் திறப்பு வழியாக வீசியது.

எல்லா, உரத்த கூச்சலிட்டுக் கொண்டு, அவளுடைய பிள்ளையை தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள். மற்றவர்கள் முற்றிலும் குழம்பிப் போய் சுவரண்டையில் பின்னால் சென்றனர். அந்த ஒளியானது அந்த அறையை பலதடவை வட்டமிட்டுக்கொண்டு, படுக்கையின் மேல் நின்று, தாய் மற்றும் பிள்ளையின் மேலாக வட்டமிட்டுக் கொண்டு, மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் பிரகாசித்தது. சுமார் ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரம் அதேவிதமாக நின்று, அந்த அறையில் உள்ள ஒவ்வொருவரும் அதைப் பார்க்கும்படியாக காட்சியளித்தது. பிறகு, அது எவ்வளவு வேகமாக வந்ததோ அதே விதமாக அந்த ஒளிப்பந்து வேகமாக சுழன்றபடி அங்கிருந்து கூரையின் வழியாக கடந்து சென்று விட்டது.

சார்லஸ் அது போனதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென கதவு பக்கமாக சிறகடிக்கும் சத்தம் அவனுடைய கவனத்தை திசை திருப்பியது. அங்கே ஒரு புறா திறந்திருந்த அந்த ஜன்னலிலுள்ள மரப்பலகையில் வந்திறங்கியது. அந்த பனி வெண்புறாவானது எதையோ அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அறைக்குள் கூர்ந்து நோக்கிப் பார்த்தது. அது புதிதாக பிறந்த குழந்தையை அடையாளம் கண்டு கொண்டபோது, அது வெளியே பறந்து

செல்வதற்கு முன்பாக தன் தலையை உயர்த்தி கூவியது. சார்லஸ் அந்த பறவையையும் கூரையையும் திரும்ப திரும்பப் பார்த்தான்.

அண்டை வீட்டு பெண்மணிகளுள் ஒருத்தி, “நல்லது, நான் ஒருபோதும் இப்படிப்பட்டவைகளைக் கண்டதில்லை” என்று முணுமுணுத்தாள்.

மற்றவள், தன்னையே மறந்தவளாய், “இந்த குழந்தை எப்படிப்பட்டவனாக இருப்பானோ என்று வியப்படைகிறேன்” என்றாள்.

அப்போது பில்லிக்கு 15 நிமிட வயது மட்டுமே.

அவன் பிறந்த 15 நிமிடத்திற்குள்ளாக இந்த இரண்டு சம்பவமும் நடக்கிறது.

அங்கே வசித்தவர்கள் எல்லோருக்கும் இது ஒரு பேச்சாகிவிட்டது. “இப்படிப்பட்ட ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. வினோதமான வெளிச்சம் வந்தது. அந்த வெளிச்சம் குழந்தை மேல் பிரகாசித்தது. அந்த குழந்தை எப்படி இருக்குமோ தெரியவில்லையே” என்று அந்த பகுதியில் உள்ளவர்கள் ஆச்சரியப்பட்டனர். எல்லா குழந்தைகளையும் விட இது ஒரு விசேஷித்த குழந்தை என்று அறிந்து கொண்டனர்.

மோசே பிறக்கும் போது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை திவ்ய சவுந்தரியம் உள்ள குழந்தை என்று கண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. எபிரேயர் 11:23ல் அதை வாசிக்கலாம். “மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்.”

பிரன்ஹாம் பிறந்தபோது ஷெக்கினா மகிமை வந்தது. அவர் மேல் வந்தது. ஏனென்றால் அந்த குழந்தையானது விசேஷித்த ஒரு குழந்தை. தேவன் அதைத் தெரிந்துகொண்டிருந்தார்.

இப்பொழுது குழந்தை பிறந்து இரண்டு வாரம் ஆகி விட்டது. அவர்கள் அந்த குழந்தையை பிரதிஷ்டை பண்ண வேண்டுமென்று நினைத்தார்கள். அவர்கள் ஐரிஸ் கத்தோலிக்க சபையை சேர்ந்தவர்கள். ஆனால் ஒரு நாளும் அவர்கள் கத்தோலிக்க சபைக்கு போனதே கிடையாது. அவர்கள் இரண்டு பேரும் கத்தோலிக்க மார்க்கத்தை சேர்ந்தவர்கள். ஆனாலும் கத்தோலிக்க மார்க்கத்தைக் எந்த காலத்திலும் கடைப்பிடித்தது கிடையாது. சபைக்குப் போனதே கிடையாது.

ஆனால் இப்பொழுது அவர்கள் பக்கத்தில் இருக்கிற ஒரு சபைக்குச் சென்று குழந்தையை பிரதிஷ்டை பண்ணலாம் என்று முடிவு செய்தார்கள். அந்த சபையின் பெயர் அப்போஸம் கிங்டம் பாப்டிஸ்ட் சபை (Opossum Kingdom Baptist Church) ஆகும். அது மிகவும் எளிமையான ஒரு சபை. அங்கு ஒழுங்கான ஒரு மேய்ப்பர்

கிடையாது. அங்கே பெரும்பாலான ஞாயிற்றுக் கிழமைகளில், சபையார் பாட்டு பாடி, வேதம் வாசித்து, ஜெபம் பண்ணி விட்டுப் போய் விடுவார்கள். இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை தான் ஒரு மேய்ப்பர் வருவார். ஆனால் இப்பொழுது அந்த மேய்ப்பர் வந்து இருக்கிறார். அந்த மேய்ப்பரிடம் அந்த குழந்தையை பிரதிஷ்டை பண்ணும் போது அவர், "ஆண்டவரே, இந்தக் குழந்தையை வருங்காலத்தில் உம்முடைய ஊழியத்திலே பயன்படுத்தும்" என்று அவர் அவ்விதமாக ஜெபம் பண்ணி அந்த குழந்தையை பிரதிஷ்டை பண்ணிவிட்டு போய்விட்டார்.

இப்பொழுது, 1909ம் வருஷம் அக்டோபர் மாதம். குழந்தை ஏப்ரல் மாதத்தில் பிறந்திருக்கிறது. அக்டோபர் மாதத்திலே அவருடைய தகப்பனார் சார்லஸ் பிரன்ஹாம் மரம் வெட்டுவதற்காக போய் விட்டார். அவருடைய வேலை மரம் வெட்டுதலாகும். அது கடினமான ஒரு வேலையாகும். அப்படி மரத்தை வெட்டும் வேலைக்குப் போகும்போது, சில நேரங்களில் குடும்பத்தை விட்டு அதிக நாட்கள் பிரிந்திருப்பார். பல இடங்களில் வேலை இருக்கும். அவர் போய் அங்கே வேலை செய்வதனால் வீட்டுக்கு வரமுடியாது.

இப்போது அக்டோபர் மாதம் ஆகிவிட்டது. அப்போது எல்லா பிரன்ஹாம் வீட்டிலே இருக்கிறார். இப்போது முதல் குழந்தைக்கு 6 மாதம் தான் ஆகிறது. இப்போது எல்லா பிரன்ஹாம் மறுபடியும் கர்ப்பமாகி விட்டார்கள். சார்லஸ் வேலைக்காக அதிக தூரம் போய் வீட்டுக்கு திரும்பவில்லை. அக்டோபர் மாதத்தில் நான்கு மாத குழந்தை வயிற்றில் இருக்கிறது. அப்படி என்றால் என்ன அர்த்தம்? பாருங்கள்? குழந்தை பிறந்து இரண்டு மாதத்தில் மறுபடியும் கர்ப்பம் ஆகியிருக்கிறார்கள். நாலு மாத குழந்தை வயிற்றில் இருக்கிறது. இவ்விதமான வேளையிலே தகப்பனார் வேலைக்காக – மரம் வெட்டுவதற்காக மிக அதிக தூரம் போய் விட்டார். பல நாட்கள் வீட்டிற்கே வரவில்லை.

அவ்விதமாய் இருக்கும்போது பனிப்புயல் வந்தது. அமெரிக்காவில் அடிக்கடி பனிப்புயல் வருவதுண்டு. அந்த புயல் ஏற்படும்போது வீட்டில் விறகு இருக்க வேண்டும். விறகை வைத்து அவர்கள் தீ மூட்டி அனல் ஏற்படுத்த வேண்டும். அல்லது மரித்துப்போய் விடுவார்கள். அவர்களுக்கு ஆகாரமும் வேண்டும். அனலும் வேண்டும். அனலுக்காக தீ மூட்ட வேண்டும். அப்பொழுது அதிக குளிர் வந்தது. வீடும் அவ்வளவு நல்ல வீடு கிடையாது. அதனால் அந்த வீட்டுக்குள்ளே அதிக குளிர் வந்து விட்டது. பக்கத்தில் யாருமே கிடையாது. ரொம்ப தூரத்தில் தான் வீடு இருக்கிறது. டாக்டரிடம் போக வேண்டும் என்றால் 40 மைல் தூரம் போக வேண்டும். தீ மூட்டி, அனல் ஏற்றுவதற்கு விறகும் இல்லை. என்ன செய்யலாம்? விறகும் வெட்டி விட்டு வரமுடியாது. பனிப்புயல் ஏற்பட்டிருக்கிறது.

வீட்டில் பக்கெட்டில் இருந்த தண்ணீர் கூட ஐஸ் கட்டியாக மாறிவிட்டது. அந்த அளவுக்கு குளிர். தண்ணீர் எல்லாமே ஐஸ் கட்டியாக மாறி விட்டது.

அவ்விதமாக இருக்கும் போது, அங்கே விறகும் இல்லை. ஆகாரமும் இல்லை. என்ன செய்வது? சார்லஸும் வரவில்லை. அதனால் வீட்டில் இருக்கிற துணிகளை எல்லாம் எடுத்து குழந்தையையும் தன்னையும் சுற்றிவிட்டு படுத்துக் கொண்டார். "என்ன ஆகிறதோ பரவாயில்லை. கர்த்தர் எப்படி வழிநடத்துகிறாரோ அப்படி ஆகட்டும்" என்று சொல்லி பிரன்ஹாமுடைய தாயார் குழந்தையையும் தன்னையும் சுற்றிக் கொண்டு அப்படியே கட்டிலில் வந்து படுத்துக்கொண்டார்.

அப்படி இருக்கிற வேளையில், கொஞ்ச தூரம் தள்ளி ஒரு வயதானவர் வசித்து வந்தார். அவர் நல்ல ஒரு மனிதர். அவர் அந்த வீட்டைப் பார்க்கும்போது அந்த வீட்டில் சிம்னியில் புகை வரவில்லை. "எல்லார் வீட்டிலேயும் அனலுக்காக தீ மூட்டி புகை வந்துக் கொண்டேயிருக்கும். மேலே புகை போவது தெரியும். அந்த வீட்டில் சிம்னியில் புகை வரவில்லையே. அங்கே ஆள் இருக்கிறார்களா இல்லையா? ஒரு வேளை ஆள் இருந்தால் செத்து போய் இருப்பார்களோ? குளிரில் செத்துப் போய் இருப்பார்களோ?" என்று நினைத்தார்.

"நான் போய் அதைப் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு பார்க்க போனார். அப்படி போய் பார்க்கும்போது குழந்தையும் தாயும் துணியில் சுற்றிக்கொண்டு மயக்கத்தில் மரிக்கும் தருவாயில் இருந்தார்கள். அவர் போய் விறகு கொண்டு வந்து, நெருப்பு மூட்டி, தண்ணீர் கொண்டு வந்து அவர்களுக்கு குடிக்கக் கொடுத்து அவர்களை உயிரோடு மீட்டார். மரிக்கப் போகிற நிலையில் இருந்த அவர்களைக் காப்பாற்றினார்.

அந்த குழந்தையையும் தாயையும் காப்பாற்றியதும் சார்லஸ் வீட்டிற்கு வந்து விட்டார். சார்லஸ் வரும்போது இவ்விதமான ஒரு நிலைமை ஏற்பட்டதைப் அறிந்து, அவருக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. அதனால் அடுத்த குளிர் காலத்தில் – அக்டோபர் மாதத்தில் பனிக்காலம் வந்தபோது அவர் தூரமாய் போகவில்லை. "இனி நாம் தூரமாய் போனால் மனைவிக்கும் குழந்தைக்கும் ஆபத்து" என்று சொல்லி அதிக தூரமாய் போகாமல் பக்கத்திலேயே அவர் வேலை செய்துக் கொண்டிருந்தார்.

அவ்வாறு வேலை செய்துகொண்டிருக்கும்போது 1910ம் வருஷம் இரண்டாவது குழந்தையாகிய எட்வர்டு (Edward) பிறந்தான். 1909ம் வருஷம் பிரன்ஹாமும், 1910ல் இரண்டாவது குழந்தை எட்வர்டும் பிறக்கிறார்கள். எட்வர்டு பிறந்த பின்பும் அவர்கள் தாயார் கர்ப்பம் தரித்தார்கள். எனவே 1911ம் வருஷம் ஹென்றி பிறக்கிறான். எல்லாம் ஒரு வருஷம் தான். பிரன்ஹாமுக்கும் எட்வர்டுக்கும் 11 மாதம் தான் வித்தியாசம். மூன்றாவது குழந்தை ஹென்றி (Henry). ஹென்றி பிறக்கிறான். இப்போது அவருடைய தாயாருக்கு 17 வயது. 17 வயதில் அவர்களுக்கு மூன்றாவது குழந்தை.

பிரன்ஹாமுடைய தகப்பனாராகிய சார்லஸ் அவருடைய பெற்றோருக்கு 17 வது குழந்தையாகப் பிறந்தார். அதனால் அவருடைய பெற்றோர், பிள்ளைகளை சரியாக கவனிக்கவில்லை. அந்த பிள்ளைகள் இஷ்டம் போல வளர்ந்தன. இவர் தீய நண்பர்களுடன் சேர்ந்து பழகி ஒரு குடிகாரர் ஆனார். குடிக்கு அடிமையானார். இப்போது விஸ்கி குடிக்கிறார். அவருக்கு அநேக கெட்ட நண்பர்கள் இருக்கிறார்கள். யாருக்கு? பிரன்ஹாமுடைய தகப்பனாருக்கு.

ஒரு நாள் ஒரு கேளிக்கை விருந்தில் எல்லோரும் குடித்துவிட்டு இருக்கும்போது, சார்லஸுடைய நண்பனை ஒரு பொல்லாத ரவுடி கீழே தள்ளி, அவன் மேலே ஏறி நின்று கத்தி எடுத்துக் குத்த ஆயத்தமானான். அவன் பெயர் வில்லி யார்பிறவ் (Willy Yarbrough). அவன் ஒரு பொல்லாத ரவுடியாக இருந்தான். எல்லாரும் போதையில் இருக்கிறார்கள். அவன் கத்தி எடுத்து குத்த ஆயத்தமானான். அவன் மிகவும் பொல்லாதவன். ஈவு இரக்கம் இல்லாதவன். அவனுக்கு இரக்கம் என்பதே கிடையாது. அப்படிப்பட்டவன். சார்லஸ் பிரன்ஹாம், “நம்முடைய நண்பனை அவன் கொலை செய்து விடுவான். இன்னும் கொஞ்சம் நிமிடத்தில் அவன் கொலை செய்து விடுவான்” என்று எண்ணினார். அதனால் அவர் ஒரு இருக்கையை எடுத்து அவன் தலைமேல் போட்டு விட்டார், இதனால் அவனால் குத்த முடியவில்லை. அப்போது அந்த ரவுடி அவனை விட்டுவிட்டு சார்லஸை துரத்த ஆரம்பித்தான்.

அவன் மிக பொல்லாதவன். நிச்சயம் சார்லஸை கொன்று போடுவான். அவன் ஈவு இரக்கமே பார்க்க மாட்டான். அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நேரத்தில் சார்லஸ் கத்தியை எடுத்து அவனைக் குத்தி விட்டார். அந்த இரத்த வெள்ளத்தில் அவன் கிடந்தான். இவர் ஓடி விட்டார். பிரன்ஹாமுடைய தகப்பனாருடைய ஜீவியம் எப்படி இருக்கிறது, பாருங்கள்? இம்மாதிரியான ஒரு குடும்பத்தை தான் ஆண்டவர் தெரிந்து கொண்டார். இது பர்கஸ்வில், கென்டக்கி (Burkesville, Kentucky) என்ற இடத்தில் நடக்கிறது. பிறகு, போலீஸ் இவரைத் தேடினது. அந்த ரவுடி சாகவில்லை. ரத்த வெள்ளத்தில், குற்றுயிராய் கிடந்தான். போலீஸ் விசாரணை செய்து, சார்லஸ் பிரன்ஹாமை பிடிப்பதற்காகத் தேடினது.

சார்லஸ் பிரன்ஹாம் மனைவியிடம் வந்து, “இதே போல நான் ஒரு கொலை செய்து விட்டேன். போலீஸ் என்னைத் தேடுகிறது. நான் இங்கே இருக்க முடியாது. நான் ஒரு மறைவான இடத்திற்குப் போகிறேன். எனக்கு சூழ்நிலை எல்லாம் சரியான பிறகு, எனக்கு நல்ல ஒரு வேலைக் கிடைத்த பிறகு, உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன். அதுவரைக்கும் நீ குடும்பத்தைப் பார்த்துக்கொள். இப்பொழுது நான் இங்கே இருந்தால் போலீஸ் பிடித்துக்கொள்ளும்” என்று கூறினார். “எனக்கு வேலைக் கிடைத்து, எனக்கு பிரச்சினை எல்லாம் தீர்ந்த பிறகு, எங்கே இருக்கிறேன் என்று உனக்கு சொல்கிறேன். அப்புறம் நீ என்னுடன் வந்துவிடு” என்று சொல்லும் இந்த நேரத்தில் அவர்களுக்கு 3 குழந்தை இருக்கிறது. எல்லா பிரன்ஹாமுக்கு 17

வயதாக இருக்கும் போது, அவர்களுக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய கணவனின் குடும்பத்தார் யாரும் வசதியாய் இருக்கிறார்களா? யாரும் வசதியாய் இல்லை.

தன்னுடைய மனைவியையும் 3 குழந்தைகளையும் தனியாக விட்டு விட்டு போய்விட்டார். பிரன்ஹாமுக்கு இரண்டரை வயது, எட்வர்டுக்கு ஒன்றரை வயது, ஹென்றிக்கு ஆறுமாதம். இந்த தாயையும் 3 குழந்தைகளையும் விட்டு விட்டு அவர் போய் விட்டார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு தாய் இருப்பாளானால் எப்படி இருக்கும் என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அது மாத்திரமல்ல. அங்கே வயிற்றிலும் ஒரு குழந்தையை விட்டு விட்டு போயிருக்கிறார். 4வது குழந்தை வயிற்றில் இருக்கிறது. இந்த மாதிரி இருக்கும்போது அந்த அம்மா எப்படி குடும்பத்தை நடத்த முடியும் என்று யோசித்துப் பாருங்கள். நாமாக இருந்தால் குடும்பத்தை நிர்வாகிக்க முடியுமா? அந்த சிறிய வீட்டுக்குள்ளே 3 குழந்தைகளும் ஒன்றோடு ஒன்று தகராறு பண்ணுவார்கள். அடித்து சண்டைப் போடுவார்கள். அவர்களால் அதை எப்படி நிர்வாகிக்க முடியும்?

வயிற்றிலே வேறு குழந்தை இருக்கிறது. பணமும் கிடையாது. ஒன்றும் கிடையாது. பிழைக்கவே முடியாது என்கிற சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது ஹென்றிக்கு முதல் பிறந்த நாள் வந்தது. எட்வர்டுக்கு இரண்டாவது பிறந்த தினம் வந்து விட்டது. பிரன்ஹாமுக்கு இப்போது கிட்டத்தட்ட 3 வயது ஆகப்போகிறது. வயிற்றில் இருக்கும் குழந்தையானது சீக்கிரம் பிறக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும் பொழுது, அந்த தாய் எப்படி தன் வீட்டை நிர்வகித்தார்களோ தெரியவில்லை. அவர்களுடைய ஜீவியமானது மிகவும் பரிதாபமான ஒரு நிலையில் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், குழந்தை என்றைக்கு பிறக்கிறது என்று தெரியாது. 3 குழந்தை வேறு இருக்கிறது.

ஒரு வழியுமில்லை. யாருடைய ஆதரவும் இல்லை. அப்படி இருக்கும்போது, பிரன்ஹாமும் அவருடைய தம்பி எட்வர்டும் இரண்டு பேரும் சேர்ந்து விளையாடப் போகிறார்கள். அங்கே ஒரு சேறு நிறைந்த பள்ளம் இருந்தது. அந்த சேறு நிறைந்த பள்ளத்தில், பிரன்ஹாம் மூத்த பையனாக இருந்த போதிலும், "நான் என்னுடைய பெலத்தை உனக்கு காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய கல்லை எடுத்து சேற்றில் போட்டார். "என் பலம் எப்படி இருக்கிறதென்று பார்." அப்படி ஒரு சேட்டை செய்தார்கள். அந்த ஒரு பெரிய கல்லை எடுத்து சேற்றில் போட்ட போது, சேறு தெறித்து எட்வர்ட்டின் மேலே சேறு பட்டது. அவன் உடனே அழுது விட்டு தாயாரிடம் போனான். அவர்கள் தாயார் அந்த சேற்றை எல்லாம் கழுவி விட்டார்கள். இப்பொழுது பிரன்ஹாம் மட்டும் ஏரி பக்கத்தில் இருந்தார்.

அப்பொழுது அந்த பக்கத்தில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு பறவை கூப்பிட்டுக் கொண்டிருந்ததை பிரன்ஹாம் பார்க்கிறார். அங்கே ஒரு பறவை

இருக்கிறது. காற்றினுடைய சத்தத்தால் இலை எல்லாம் அசைகிறது. இப்பொழுது அந்த பறவை வந்து சொல்கிறது – அந்தப் பறவை பேசுகிறது. “நியூ ஆல்பனி (New Albany) என்ற பட்டணத்துக்கு அருகிலே நீங்கள் வசிப்பீர்கள். நீ என்ற பட்டணத் துக்கு அருகிலே வாசம் பண்ணுவாய்” என்று அந்தக் குருவி சொல்லிற்று. இந்தக் குருவி இப்படி மனித சத்தத்தில் பேசுகிறதே என்று இவருக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்த சத்தத்தை தெளிவாய் கேட்கிறார்.

அவருக்கு அப்போது மூன்று வயது தான். உடனே அம்மாவிடம் வந்து அதைக் குறித்துப் பேசுகிறார். “அம்மா! அம்மா! அம்மா! என்னவென்றால் அந்த ராபின் பறவை என்னிடம் பேசினது. அது என்னிடம், ‘நீங்கள் நியூ ஆல்பனியின் பக்கத்தில் போய் வசிக்கப் போகிறீர்கள்’ என்று சொன்னது” என்றார். அது அவர்கள் அம்மாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. “ஒரு பறவையால் எப்படி பேச முடியும்? அவன் வெறுமனே கற்பனை பண்ணிச் சொல்கிறான்” என்று நினைத்தார்கள். நியூ ஆல்பனி என்ற இடம் எங்கு இருக்கிறது என்று கூட அவனுக்கு தெரியவே தெரியாது. அந்த குழந்தைக்கு தெரியவே தெரியாது.

ஒரு நாளும் அவனுடைய வாழ்க்கையில் அதைக் கேள்விப்பட்டதே கிடை யாது. 3 வயது குழந்தைக்கு ஒன்றும் தெரியாது. அதனால் அவன் இப்படி சொன்ன பொழுது தாய்க்கு ஆச்சரியமாய் இருந்தது. “இந்த 3 வயது பையன் இப்படி சரியாக சொல்கிறானே. யாராவது ஒருத்தர் அந்த மரத்தில் போய் ஏறி இருப்பார்கள். அவர்கள் ஒருவேளை சொல்லியிருக்கலாம்” என்று எண்ணியவாறே அவர்கள் அம்மா அங்கு சென்று சத்தம் போட்டு, “ஹலோ, யாராவது இருக்கிறீர்களா? மரத்தில் யாராவது இருக்கிறீர்களா? இங்கே யாராவது இருக்கிறீர்களா” என்று கத்தினார்கள். அங்கே ஒரு சத்தமும் வரவில்லை. யாருமே இல்லை.

“அம்மா, உண்மையில் அதை அந்த ராபின் பறவை தான் சொல்லியது. நியூ ஆல்பனி எங்கே இருக்கிறது” என்றான். அப்பொழுது அவள், “இங்கே இருந்து 100 மைல் அப்பால் இருக்கிறது” என்று சொன்னார்கள். “நம்ம அப்பாவோடு அங்கே போய் வாசம் பண்ணுவோமா? அப்பா கூட சேர்ந்து அங்கே போவாமா?” அப்படி சொல்லிவிட்டு இருக்கும்போதே, ஒரு கடிதம் வந்தது. அது சார்லஸிடமிருந்து வந்த கடிதம்.

அதனால் அந்த கடிதத்தை பதற்றத்தோட படித்தாள். எல்லாவுக்கு படிக்க தெரியும். அவளுடைய தகப்பனார் ஒரு பள்ளி ஆசிரியர் ஆனதால், எல்லாவுக்கு படிக்கத் தெரியும். சார்லஸுக்கு படிக்கத் தெரியாது. அதனால் அவர் சொல்ல யாரோ எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை படித்த பொழுது, அவளுக்கு ஆச்சிரியமாய் போய் விட்டது.

“கடிதத்தில் என்ன எழுதியுள்ளது, அம்மா” என்று ஆர்வமாய் கேட்டான் பில்லி.

அவள் வாசித்ததை அவனிடம் சொன்னாள். “உன்னுடைய அப்பா இப்போது இன்டியானாவில் (Indiana) இருக்கிறாராம். அவருக்கு ஒரு நல்ல வேலை கிடைத்துள்ளதாம். நாம் எல்லோரும் அங்கே போக வேண்டுமாம். அது ஊட்டிகா (Utica) என்னும் இடத்தில் உள்ளது” என்று சொல்லி முடித்தாள்.

“ஊட்டிகா எங்குள்ளது, அம்மா?” என்று கேட்டான். அவள் நிறுத்தி விட்டு ஆச்சரியத்தோடு அவனை நோக்கிப் பார்த்தாள்.

“அது இன்டியானாவிலுள்ள நியூ ஆல்பனியிலிருந்து நூறு மைல் அப்பால் உள்ளது. நாம் இனி அங்கே தான் வசிக்கப் போகிறோம்” என்று அவள் மெதுவாக சொன்னாள்.

அந்த கடிதத்துடன் பணமும் சேர்த்து அனுப்பியிருந்தார். பாருங்கள், அந்த பறவை சொன்னது உண்மையாகி விட்டது.

மரக்கட்டைகளை கொண்டு உண்டாக்கப்பட்ட அந்த வீட்டில் அவர்களும் 3 பிள்ளைகளும் எவ்வளவு கஷ்டத்தோடு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்த தாய் குழந்தைகளை மிகவும் பொறுமையோடு எல்லாவற்றையும் சகித்து வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது இந்த பிரச்சினைகளுக்கு முடிவு வந்து விட்டது. நியூ ஆல்பனிக்கு அவர்கள் அனைவரும் புறப்பட்டார்கள். சார்லஸ் பிரன்ஹாம் அனுப்பிய பணத்தில், நியூ ஆல்பனிக்கு அருகிலுள்ள ஊடிகாவிற்கு போனார்கள்.

## சகோ.பிரன்ஹாமின் முதலாவது தரிசனம்

1912ம் வருஷம், மே 27–ல், எல்லாவுக்கு 4வது குழந்தையாக மெல்வின் பிறக்கிறான். 9 ஆண் பிள்ளைகள், 10வது ஒரு பெண் பிள்ளை. அந்த பெண் குழந்தை பெயர் டெலாஸ். முதலாவது குழந்தை பிரன்ஹாம், இரண்டாவது குழந்தை எட்வர்ட், 3வது ஹென்றி, 4வது மெல்வின் (Melvin), 5வது எட்கர் லீ, 6வது ஜெஸி, 7வது சார்லஸ் ஜூனியர், 8வது ஹோவார்ட், 9வது ஜேம்ஸ் டொனால்ட், கடைசியாக 10 வது பெண் குழந்தை பெயர் டெலாஸ். இப்படி 10 பிள்ளைகள். வரிசையாக 9 ஆண் பிள்ளைகள். கடைசியாக ஒரு பெண் குழந்தை.

பிரன்ஹாம் முதலாவது குழந்தை. அவருடைய குடும்பச் சூழ்நிலை எப்படி இருக்கிறதென்று பாருங்கள். இப்பொழுது மே 27ம் தேதி 1912ம் வருஷம் 4வது குழந்தை மெல்வின் பிறந்திருக்கிறான். சார்லஸ் பிரன்ஹாம் இப்பொழுது விவசாய வேலை செய்கிறார். அந்த வேலை மிகவும் கடினமான வேலையாக இருந்தது. 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது.

அந்த எஜமான் அதிக கடினமான வேலை கொடுக்கிறார். சம்பளமோ மிகவும் குறைவு. 50 ரூபாயை விட கம்மி. 75 சென்ட் தான் ஒரு நாளைக்கு கூலி. இது

இன்றைக்கு நம் பணத்துக்கு 40 ரூபாய் இருக்கும். இந்த மாதிரி கடினமான வேலை செய்கிறார். மரம் வெட்டும் வேலையும் அவருக்குத் தெரியும். இந்த வேலை செய்து விட்டு, சில நேரங்களில் சம்பளம் போதாது என்ற காரணத்தால் மரம் வெட்டும் வேலைக்கும் போய் வந்தார்.

இப்படியாக அவர் குடும்பத்தை நடத்தி வந்தார். அந்த எஜமானின் பெயர் திரு.வேதன் (Mr.Wathen). அந்த வேதன் என்கிறவர் பெரிய பணக்காரர். இப் பொழுது, அவர் சார்லஸிற்கு சொந்தமாக ஒரு வீடு கொடுத்திருக்கிறார். அது ஒரு சாதாரண வீடு தான். 2 அறை உள்ள வீடு. சம்பளம் குறைவாக இருந்தாலும் இப்பொழுது அந்த வீட்டுக்கு வாடகை கிடையாது. வாடகை இல்லாமல் சொந்தமாக வீடு கொடுத்திருக்கிறார். அது மாத்திரம் அல்ல. அந்த வீட்டைச் சுற்றி பெரிய தோட்டம் இருக்கிறது. ஏதாவது பயிர் செய்து சாப்பிடலாம்.

அது மாத்திரம் அல்ல. அந்த எஜமானுக்கு பால்பண்ணையும் உண்டு. ஒவ்வொரு இரவும் ஒரு பக்கெட் பால் எடுத்துகொண்டு வரலாம். இப்படியாக சிறிது வசதி கிடைத்தது. காய்கறி செடிகளை வளர்த்ததால் அதுவும் சிறிது பிரயோஜனமாக இருந்தது. ஒவ்வொரு நாள் சாயங்காலமும் பால் கிடைத்தது. வீட்டு வாடகை கிடையாது. இவ்விதமாக அங்கே 4 குழந்தைகளை வைத்துக்கொண்டு அவர்கள் ஜீவித்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சம்பளம் மிகவும் குறைவு.

இப்படியிருக்கையில் குளிர்காலம் வந்தது. அந்த குளிர்காலத்தில் தண்ணீர் எல்லாம் ஐஸ் கட்டியாக மாறி விட்டது. அங்கே ஒரு நீரூற்று இருந்தது. அந்த தோட்டத்தில் ஒரு நீரூற்று இருந்தது. பில்லி பிரன்ஹாம் அந்த நீரூற்றைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அங்கே ஒரு ஏரியும் இருந்தது. ஏரியில் மீன் பிடிப்பது பிரன்ஹாமுக்கு பொழுது போக்காக இருந்தது. அவர்கள் தாயார் கோதுமை ரொட்டி செய்து கொடுப்பார்கள்.

இப்படி இருக்கிற வேளையில் அடுத்த குழந்தை பிறக்கிறது. 1914ம் வருஷம் மே மாதம் 14ம் தேதி எட்கர் லீ பிறக்கிறான். இதுதான் 5 வது குழந்தை. 3 வருஷம் கழித்து 5வது குழந்தை பிறந்தது. சார்லஸிற்கு சம்பளம் மிகவும் குறைவு. பிரன்ஹாமுக்கு இப்போது 8 வயதாகிறது. அவர் மீன் பிடிப்பதை பொழுது போக்காக கொண்டிருந்தார்.

அவர்கள் தகப்பனார் சனிக்கிழமை ஆகும்போது சம்பளத்தை வாங்கிவிட்டு அருகில் இருக்கும் பட்டணத்திற்கு போய் மளிகை சாமான்கள் எல்லாம் வாங்குவார். அந்த மளிகை கடைக்காரர் பெயர் திரு. குரோவர் (Mr. Grover). அந்த மளிகை கடைக்காரர் கொஞ்சம் பொருள் வாங்கின உடனே குழந்தைகளுக்கு குச்சி மிட்டாய் போன்ற ஒன்றை கொடுப்பார். அவர்கள் தகப்பனார் ஒரு வண்டியில் போவார். பிள்ளைகளும் வண்டியில் ஏறி விடுவார்கள்.

குழந்தைகள் எல்லாருக்கும் அது பெரிய பிரயாணம் போல இருந்தது. அங்கு சென்று மளிகை சாமான்களை வாங்கி விட்டு, அவர் கொடுக்கும் குச்சி மிட்டாயை கொஞ்சம் கொஞ்சமாக பிள்ளைகள் சாப்பிடுவர். பிரன்ஹாம் அதில் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு பேப்பரில் மீதியுள்ளதை சுற்றி வைத்துக் கொள்வார். பிறகு அடுத்த நாள் அதில் கொஞ்சம் சாப்பிடுவார். இப்படியாக அவர்களுக்கு அங்கு திண்பண்டமே கிடைக்காது. எனவே இது ஒரு பெரிய சந்தோஷமாக அவருக்கு இருந்தது.

அவருடைய தகப்பனார் அவரை வேலை செய்ய சொல்வார். அங்கிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வர வேண்டும். அதில் பயன்படுத்தப் பட்ட பக்கெட் மரத்தால் செய்யப்பட்டிருந்தது. எனவே அது அதிக பாரம் கொண்ட தாக இருக்கும். தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும் போது அவருக்கு மிகவும் களைப்பாக இருக்கும். அதனால் அந்த குச்சி மிட்டாயை பாக்கெட்டில் வைத்திருப்பார். அதைக் குறித்து எட்வர்டிடம் சொல்லுவார். “நான் குச்சி மிட்டாய் தருகிறேன். அதற்குப் பதிலாக நீ தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவாயா?” என்று கேட்பார். அவர் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவார். “நீ அந்த மிட்டாயை 5 முறை தான் சூப்பணும். அதற்கு மேல் சூப்பக்கூடாது” என்பார். அப்பொழுது அவர் வேக வேகமாக சூப்பி விடுவாராம். இப்படி அவர் மிட்டாயைக் கொடுத்து அவனை வேலைக்கு ஏவி விட்டார். இவருடைய தகப்பனார் கொஞ்சம் கடினமாக வேலை வாங்குவார். இந்த 7 வயது பையனும், 8 வயது பையனும் தண்ணீர் எடுத்துக் கொண்டு வர வேண்டியதாக இருந்தது. அது எவ்வளவு கஷ்டம் பாருங்கள்.

ஆகஸ்ட் மாதம் ஆகிவிட்டது. 1916ம் வருஷம் தேசத்தில் மதுவிலக்கு அமலுக்கு வந்தது. மது சாப்பிடக்கூடாது. அவ்விதமாக இருந்த போதிலும் சார்லஸால் மது குடிக்காமல் இருக்க முடியவில்லை. அதனால் அவர் சொந்தமாக மது தயார் பண்ண ஆரம்பித்தார். சொந்தமாக மது தயார் பண்ணுவதற்கு தண்ணீர் தேவை. சாராயம் காய்ப்பதற்கு தண்ணீர் தேவைப்பட்டது. அதற்குத் தேவையான தண்ணீரை பையனை விட்டு எடுத்துக் கொண்டு வரச் சொல்லுவார். இவருக்கு அது பிடிக்கவே பிடிக்காது. “அதுவும் இந்த சாராயம் காய்ப்பதற்கு நாம் தண்ணீர் எடுக்கவா?” என்று மனதில் நினைத்தார். இருந்தாலும் தகப்பனார் சொன்னால் மீற முடியாது. அவ்விதமாக தண்ணீர் எடுக்கிறார்.

இப்போது பிரன்ஹாமை ஒரு பள்ளியில் சேர்த்தார்கள். 1916ம் வருஷம் செப்டம்பர் மாதம் அவரையும் அவருடைய தம்பி எட்வர்டையும் அவர்கள் தகப்பனாரும் தாயாரும் ஒரு பள்ளியில் சேர்த்தார்கள். அந்தப் பள்ளியின் பெயர் ஊடிகா பைக் பள்ளி. அது ஒரு வீட்டில் நடந்தது. அதற்கு எதிராக ஓஹியோ (Ohio) நதி பாய்ந்து கொண்டிருந்தது.

அந்த பள்ளி ஆசிரியை பெயர் திருமதி. டெம்பிள் (Mrs. Temple). 6 வயது முதல் 15 வயது வரை உள்ள பிள்ளைகள் அந்த பள்ளியில் படித்தார்கள்.

பிரன்ஹாமை பள்ளியில் சேர்க்கும்போது அவருக்கு காலணிகள் கிடையாது. சரியான ஆடை கூட இல்லை. சரியான சாப்பாடும் கிடையாது. ஆனால் எல்லா பிள்ளைகளும் காலணிகள் அணிந்திருந்தார்கள். நல்ல ஆடை உடுத்தியிருந்தார்கள்.

அது மாத்திரமல்ல, நல்ல தின்பண்டங்களை எல்லாம் அந்த பிள்ளைகள் கொண்டு வருவார்கள். இவருக்கு ஒரு தின்பண்டமும் கிடையாது. அவர்கள் தாயார் கார்ன் கிராக்கர் எனப்படும் ஆகாரத்தை செய்து கொடுப்பார்கள். கார்ன் கிராக்கர் (corn cracker) என்பது கடித்தால் கரகர வென்று இருக்கும் ஒரு தின்பண்டம். ஒரு பிஸ்கெட் மாதிரி இருக்கும் இதனுடன் கொஞ்சம் சர்க்கரை பாகும் ஒரு பெரிய பாத்திரத்தில் இரண்டு பேருக்குமாக சேர்த்து கொடுத்து விடுவார்கள். இந்த சாப்பாடு எல்லாம் மற்றவர்கள் முன்னால் இருந்து சாப்பிட முடியாது. அண்ணனும் தம்பியும் தனியாகப் போய் சாப்பிடுவார்கள். ஏனெனில் மற்றவர்கள் அதைப் பார்த்து சிரிப்பார்கள். அப்போது தான் பிரன்ஹாம் தான் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கிறோம் என்பதை உணர்ந்தார்.

“அந்தப் பிள்ளைகளைப் பார்க்கும் போது நம்முடைய குடும்பம் மிகவும் ஏழை குடும்பம். நம்முடைய சாப்பாடு சரி இல்லை. ஆடை சரி இல்லை. எல்லா பிள்ளைகளும் நன்றாக ஆடை அணிந்து கொண்டு பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல சாப்பாடு இருக்கிறது. நல்ல தின்பண்டம் வைத்திருக்கிறார்கள். நமக்கு ஒன்றுமே இல்லை” என்று வருந்தினார்.

ஒரு நாள் அவர்கள் எஜமானுடைய மனைவி திருமதி. வேதன் இந்த அவல நிலையைப் பார்த்தாள். பள்ளிக்குச் செல்ல ஆடை இல்லை என்று சொல்லி ஒரு கோட்டை கொடுத்தாள். இவர் அந்த பழைய கோட்டை பின் பண்ணி மாட்டிக் கொண்டார். இப்படி இறுக்கமாக கழுத்து வரைக்கும் மாட்டிக் கொண்டார். ஏன் என்றால் கோட் அணிய வேண்டுமானால் உள்ளே சட்டைப் போட்டுத் தான் அதை அணிவார்கள். அவருக்கோ உள்ளே போட சட்டை இல்லை. அதனால் சட்டை இருக்கிறதா இல்லையா என்று தெரியக்கூடாது என்பதற்காக டைட்டாக கோட்டை பின் பண்ணி அணிந்து கொண்டார். இவ்வாறு அவர் பள்ளிக்குப் போய்க் கொண்டு இருக்கிறார். எல்லா பிள்ளைகளும் உள்ளே சட்டை அணிந்து, அதற்கு மேலே கோட் போட்டிருக்கிறார்கள்.

இப்போது பிரன்ஹாமுக்கு சுமார் 7 வயது ஆகிவிட்டது. அவருடைய தகப்பனார் சார்லஸ் பிரன்ஹாமுடைய நண்பர் டான்புஷ் (Mr.Dornbush) என்பவர். இந்த இரண்டு பேரும் சாராயம் காய்க்கிறார்கள். இரவில் சாராயம் காய்ச்சி, அவர்கள் குடித்தது மட்டும் அல்ல. மற்றவர்களுக்கும் கொஞ்சம் விற்று விடுவார்கள்.

அவர் ஒரு நாளில் தன் நண்பர்களோடு சேர்ந்து மீன் பிடிக்க வேண்டுமென்று விரும்பினார். அவர்கள் வீட்டுப் பக்கத்திலே சின்ன ஒரு ஏரி இருந்தது. அதிலே

போய் மீன் பிடிக்க விரும்பினார். அவர்களும், “சாயங்காலம் வருகிறோம்” என்று சொல்லி விட்டார்கள். நண்பர்களோடு சிறிது விளையாட ஆசைப்பட்டார். ஆனால் அவர் விளையாடப் போகும் போது தூண்டிலை எடுத்துக் கொண்டு போக விரும்பினார். அப்பொழுது அவருடைய அப்பா அவரைக் கூப்பிட்டார். “வில்லியம், வில்லியம், இன்றைக்கு நல்ல வெளிச்சம் இருக்கிறதினால் நான் சாராயம் காய்ச்சப் போகிறேன். நீ தண்ணீர் எடுத்துக் கொண்டு வா” என்று கூறி விட்டார். என்ன செய்வது? மீன் பிடிக்க வருவதாக தன் நண்பர்களிடம் வாக்குக் கொடுத்து விட்டார். ஆனால் இப்போது தண்ணீர் எடுத்து தான் ஆக வேண்டும். அப்பா பேச்சை மீற முடியாது. எனவே அவர் அதற்குக் கீழ்ப்படிந்தார்.

அப்படி அந்த பக்கெட்டில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வரும்போது மூச்சு வாங்கினது, ஏனெனில் அதிக பாரம் கொண்டதாய் இருந்தது. அங்கே ஒரு மரம் இருந்தது. எனவே அந்த மரத்தினடியில் கொஞ்சம் இளைப்பாறலாம் என்று சென்றார். அப்போது மரத்திலிருந்து காற்று அசைகிற சத்தம் கேட்டது. அங்கிருந்து புயல் காற்று போல் *உஷ் உஷ்* என்று சத்தம் கேட்டது. அப்படி கேட்டபோது, அது என்னவாக இருக்கும் என்று அவர் எட்டிப்பார்த்தார். அங்கே ஒன்றுமே இல்லை. காற்று வந்து, மரத்தை அசைத்தது போல தோன்றியது. அப்போது அங்கே தெளிவான ஒரு சத்தம் கேட்டது. அந்த பெருங்காற்றிலே இருந்து ஒரு சத்தம் பிரன்ஹாமிடம் பேசியது: “***நீ குடிக்காதே, புகை பிடிக்காதே, உன்னுடைய சரீரத்தை நீ எந்த விதத்திலும் கெடுத்துக் கொள்ளாதே. நீ பெரியவனாகும் போது உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது***” ("Don't ever drink, or smoke, or defile your body in anyway. There will be a work for you to do when you get older.") என்று அந்த சத்தம் பேசியது.

“இப்போது நீ சின்ன பையனாய் இருக்கிறாய். பெரியவனாகும்போது உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது. நீ குடிக்காதே. புகை பிடிக்காதே. உன் சரீரத்தை எந்த விதத்திலும் நீ தீட்டுப்படுத்தாதே. நீ பெரியவன் ஆகும்போது உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது” என்று சொல்லப்பட்டபோது அவர் பயந்துவிட்டார். அந்த சத்தத்தைக் கேட்ட உடனே அந்த மரத்தில் என்னவோ இருக்கிறது, ஏதோ ஒரு ஆவி இருக்கிறது என்று பயந்து ஓடி விட்டார்.

அவர் அங்கிருந்து ஓடி தன் தாயாரிடம் போய் அதைச் சொன்னார். “அம்மா, அம்மா, எனக்கு பயமா இருக்கிறது” உடனே பாம்பு ஏதாவது கடித்துவிட்டதா? என்று அம்மாவுக்கு சந்தேகம் வந்தது. அங்கே விஷப்பாம்புகள் எல்லாம் உண்டு. அதனால் விஷப்பாம்பு பையனை கடித்து விட்டதோ என்று பார்க்கும்போது, “பாம்பு ஒன்றும் என்னை கடிக்கவில்லை. அந்த மாதிரி அந்த மரத்தில் இருந்து ஒரு சத்தத்தை கேட்டேன். இதே மாதிரி அந்த சத்தம் சொன்னது” என்றான். அப்படி சொல்லும்போது அவர்களால் நம்ப முடியவில்லை. மருத்துவரிடம் போய் அவரிடமும்

அந்தக் கதையைச் சொல்லும்போது அவருக்கு அது ஒரு வினோதமான ஒன்றாகத் தோன்றியது.

"அந்த பையனுக்கு ஏதோ நரம்பு தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சீக்கிரம் சரி ஆகி விடும்" என்று டாக்டர் சொன்னார். மரத்தில் இருந்து சத்தம் வந்ததினால் அதற்குப் பிறகு அவர் அந்த மரத்தின் பக்கத்திலேயே போக மாட்டார். மரத்தின் பக்கத்தில் போக பயம். அதனால் அந்த மரத்தை விட்டு தள்ளி சுற்றியே போவார். அவர் முதலாவதாக பெருங்காற்றிலிருந்து கர்த்தருடைய சத்தத்தை கேட்கிறார். கர்த்தர் பெருங்காற்றிலிருந்து யோபுவிடமும் பேசினதாக வேதத்தில் வாசிக்கிறோம்.

(யோபு 38:1–7)

1. அப்பொழுது கர்த்தர்: பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக:

2. அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்?

3. இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு.

4. நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி.

5. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல்போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு.

6. அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்?

7. அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே.

அப்பொழுது யோபுவிடம் பெருங்காற்றிலிருந்து பேசிய அதே கர்த்தர் தான் இப்பொழுது இவ்வளவு காலத்துக்கும் பிறகு பிரன்ஹாமிடமும் பெருங்காற்றிலிருந்து பேசுகிறார். *"நீ குடிக்காதே, புகை பிடிக்காதே, உன்னுடைய சரீரத்தை நீ எந்த விதத்திலும் கெடுத்துக் கொள்ளாதே. நீ பெரியவனாகும் போது உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது"* என்று பிரன்ஹாமிடம் பேசினார்.

அடுத்ததாக பிரன்ஹாம் இன்னொரு தரிசனம் காண்கிறார். அவருக்கு ஏழு எட்டு வயது இருக்கும்போது, அந்தத் தரிசனத்தைப் பார்க்கிறார்: ஓஹியோ நதி பாய்கிறது. இவர் இங்கே இருந்து நதியைப் பார்த்துக் கொண்டு இருக்கும்போது மேலே ஒரு பாலம் வருகிறது. அந்த பாலம் பெரிய பாலம். நதி மிகவும் அகலமான

நதி. அந்த பாலத்தின் கட்டுமானபணி மிகவும் கடினமாக இருக்கிறது. அந்த பாலத்தின் கட்டுமான வேலை நடக்கும்போது 16 பேர் அதிலிருந்து ஓஹியோ நதியில் விழுந்து சாகிறார்கள். அந்தப் பாலம் இடிந்து விழுந்து சாகிறார்கள். அப்பொழுது அந்த பாலமே கட்டப்பட்டிருக்கவில்லை. பாலமே கட்டவில்லை. உடனே அவர் அம்மாவிடம் சென்று இதே மாதிரியாக ஒரு தரிசனம் பார்த்ததாக சொன்னார்.

“ஒரு வேளை நீ சொப்பனம் கண்டு இருப்பாய்” என்றாள் அவள். “இல்லை, நான் அதைப் பார்த்தேன். பாலம் கட்டிக் கொண்டிருக்கும் போது, பாலத்திலிருந்து விழுந்து 16 பேர் சாகிறதை நான் பார்த்தேன்” என்றார். அதை அவர் சொன்ன போது அவருடைய தாயார் அதை நம்பவில்லை. ஆனாலும் அவர்கள் யோசிக்கி றார்கள்: “இதற்கு முன் இவன் சொன்னது மிகச் சரியாக நிறைவேறி விட்டதே. இந்த பையனோடு கூட ஏதோ ஒரு வரம் இருக்கிறது. இவன் வருங்காலத்தை சொல்லுகிறானே” என்று அவருடைய தாயார் தம் மனதில் அப்படியே அதை வைத்து சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

## சகோ.பிரன்ஹாமின் வறுமை நிலை

1916ல் முதலாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி (Germany, Austria & Hungary) ஆகிய மூன்று நாடுகளும் ஒரு அணியில் இருந்தன. பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், ரஷ்யா (France, Great Britain & Russia) ஆகியவை இன்னொரு அணியில் இருந்தன.

உலக யுத்தம் நடந்து கொண்டு இருக்கிறது. அந்த ஆசிரியர் உலக யுத்தம் பற்றி எல்லாம் சொல்கிறார்கள். இவர் அதை மிகவும் கூர்ந்து கவனிப்பார். அப்போது அமெரிக்கா இன்னும் யுத்தத்தில் குதிக்கவில்லை. அதன் பின் அமெரிக்காவும் யுத்தத்தில் குதித்து விட்டது. உலக செய்திகளை எல்லாம் ஆசிரியர் சொல்லும்போது கவனமாகக் கேட்டார்.

அவருக்கு ஒரே ஒரு கோட் தான் இருக்கிறது. வெயில் காலம் வந்து விட்டது. வெயில்காலத்தில் யாரும் கோட் போட மாட்டார்கள். வகுப்பு முடிந்ததும் கோட்டை கழற்றி விடுவார்கள். இங்கே நமக்கு அந்த பிரச்சினையே கிடையாது. கோட் தேவை இல்லை. அமெரிக்காவில் உள்ளவர்கள் பிரசங்கம் பண்ணுவார்கள். திடீரென்று கோட்டை கழற்றி வைத்துவிடுவார்கள்.

அதனால் அந்த பள்ளியில் பயிலும் பிள்ளைகள் எல்லாருமே கோட் போட்டிருந்தார்கள். வெயில் காலம் ஆயிற்று. எல்லோரும் கோட்டை கழற்றும்போது இவர் மட்டும் கோட்டை கழற்றவில்லை. அவர்கள் ஆசிரியர், “என்னாயிற்று? உனக்கு இன்னும் குளிர் போகவில்லையா? நீ அந்த கோட்டை போட்டிருக்கிறாயே” என்று கேட்டார். “இல்லை எனக்கு குளிர் அடிக்குது” என்றார். “குளிராக இருந்தால்

அங்கே ஸ்டவ் எரிகிறது. அங்கே போய் உட்கார்ந்துக்கொள். குளிர் காய்" என்றார்கள். உள்ளே சட்டை அணியாதது தெரியக்கூடாது என்பதற்காக அவர் கோட்டை கழற்றாமல் இருந்தார். அவர் அங்கே போய் ஸ்டவ் பக்கத்தில் இருந்ததால் உடல் முழுவதும் வியர்த்து வடிந்தது. "உனக்கு இன்னும் குளிர் போகவில்லையா?" என்று மீண்டும் ஆசிரியர் கேட்டார். "இல்லை" என்று பதிலுரைத்தார். "அப்படியென்றால் உனக்கு ஜுரம் இருக்கிறது. நீ வீட்டுக்கு போ" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

பாருங்கள். சரியான ஆடையின்றி பள்ளிக்குப் போவார். பென்சில் ரப்பர் வாங்கவோ புத்தகம் வாங்கவோ காசு கிடையாது. மற்ற மாணவர்களின் புத்தகத்தைத் தான் படித்தார். அங்கே அவருக்கு ஆடையும் கிடைக்கவில்லை. ஒருமுறை அவர்கள் வீட்டுக்கு சொந்தக்காரர் ஒருவர் வரும்போது, ஒரு துணியை விட்டுவிட்டு போய் விட்டார். அதை அவர்கள் தாயார் தைத்து கொடுத்தார்கள். அதை அவர் அணிந்த பொழுது அது ஒரு பெண்ணினுடைய ஆடை போன்று இருந்தது. அவர் அதை அணிந்து பள்ளிக்குச் செல்லும் பொழுது இவர் ஒரு பெண் பிள்ளை அணிகிற ஆடையை அணிந்துள்ளார் என்று எல்லா பள்ளிப் பிள்ளைகளும் அவரைக் கேலி செய்தார்கள். கால்சட்டையும் இல்லை. ஒருவர் ஒரு கால்சட்டையை துணியை இவருக்குக் கொடுத்திருக்கிறார். அதைக்கொண்டு கால்சட்டை அவருக்கு தைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த ஆசிரியர், "நீ வந்து கரும்பலகையில் எழுது" என்று சொன்ன போது, அங்கே பார்க்கும்போது, அவர் சால்சட்டையின் ஒரு காலுக்குள்ளே இரண்டு காலையும் விட்டிருந்தார். அந்த கால் சட்டையில் ஒரு கால் தான் இருந்தது. இரண்டு கால் இல்லை. இவ்வாறு அவர் மிகவும் வறுமையில் வாடினார்.

முதல் உலக யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் அதைக் குறித்து விவரித்து சொன்னார்கள். "1917ம் வருஷம் மார்ச் 18ம் தேதி ஜெர்மன் நீர் மூழ்கி கப்பல்கள், அமெரிக்காவின் மூன்று வியாபார கப்பல்களை மூழ்கடித்து விட்டது. அதனால் அமெரிக்காவும் யுத்தத்தில் குதித்தது" என்று ஆசிரியர் செய்தித்தாளில் வந்த செய்தியை வாசித்துக் காட்டினார்.

இப்பொழுது 1923ம் வருஷம் வந்து விட்டது. 1923ம் வருஷம் மே மாதம் 5ம் தேதி எட்டாவது குழந்தை பிறந்தது. அதற்கு ஹவார்டு டஃபி (Howard Duffy) என்று பெயரிட்டார்கள்.

சகோ.பிரன்ஹாம் கண்ணி வைத்து முயல் மற்றும் இன்னும் சில பறவை களையும், சில விலங்குகளையும் பிடித்து அதை விற்று, அதன் மூலம் கிடைக்கும் காசை கொண்டு வந்து வீட்டுக்குக் கொடுப்பார். இவ்விதமாக அவர் செய்கிறார். அப்படி செய்து கொண்டிருக்கும் பொழுது அவர்கள் அப்பா அந்த டான்புஷ் என்ற

கெட்ட நண்பருடனான ஐக்கியத்தை விடவில்லை. இரண்டு பேரும் சாராயம் காய்ச்சுகிற வேலையையும் விடவில்லை.

ஒரு நாள் டான்புஷ் பிரன்ஹாமை கூட்டிக் கொண்டு போனான். அந்த டான்புஷ் விஸ்கி குடித்தான். பிரன்ஹாமுக்கும் குடிக்கக் கொடுத்தான். பிரன்ஹாம், "நான் குடிக்க மாட்டேன்" என்று சொல்லிட்டார். அப்பொழுது அவர்கள் தகப்பனார், "எனக்கு பல பையன்கள் இருக்கிறார்கள். அதில் இவன் மட்டும் பெண் தன்மையுள்ளவன்" என்றார். "அவன் குடிக்க மாட்டான். ஆணாக இருந்தால் குடிக்க வேண்டும். இவன் பெண்ணாக இருப்பதால் குடிக்க மாட்டான்" என்று கேலியாக கூறினார்.

தன்னை பெண் என்று சொல்லுகிறாரே என்று பிரன்ஹாமுக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. உடனே அவர் டான்புஷ் என்கிறவனிடமிருந்து அந்த விஸ்கியை வாங்கி குடிக்க போகும்போது அந்த பெருங்காற்று மீண்டும் வந்தது. அந்த காற்றிலிருந்து மீண்டும் சத்தம் கேட்டது.

அதே சத்தம் இரண்டாவது முறை வந்தது. "புகை பிடிக்காதே, மது அருந்தாதே, உன் சரீரத்தை எந்த விதத்திலும் கெடுத்துக் கொள்ளாதே" என்று அந்த சத்தம் கூறியது.

அவர் குடிக்க பிரயாசப்படும் போது அவரால் குடிக்க முடியவில்லை. அந்த சத்தத்தைக் கேட்டதால் குடிக்க முடியவில்லை. சத்தம் வேறு யாருக்கும் கேட்க வில்லை. அவருக்கு மட்டும் தான் கேட்டது. அதனால் பாட்டிலை அவர் தூர எறிந்து விட்டார். அவர் அதை தூர எறிந்த உடனே, "என் பையன் ஒரு பெண்ணென்று நான் சொல்லவில்லையா? அதனால் தான் அவன் குடிக்கவில்லை. அவன் உண்மை யிலேயே பெண் தான்" என்று தகப்பனாரே அவரைப் பரிகாசம் பண்ணினார்.

அவரைப் பாருங்கள். பள்ளிக்குப் போகிறார். அவருக்கு பென்சில், ரப்பர் இல்லை. அப்படியாக இருக்கும்போது முதலாவது உலக யுத்தம் நடந்துக் கொண்டிருக்கிறது.

ஆபிரகாம் லிங்கனைப் (Abraham Lincoln) பற்றி பிரன்ஹாம் கேள்விப் படுகிறார். ஆபிரகாம் அடிமைத்தனத்தை ஒளித்தவர். வெள்ளைக்காரர்கள் நீக்ரோக் களை அடித்து, வேலை வாங்கினார்கள். அழுதாலும் அடித்தார்கள். ஆபிரகாம் லிங்கன் அதைப் பார்த்தார். "இதற்கு ஒரு முடிவை நான் ஏற்படுத்துவேன்" என்று முடிவு செய்தார். அந்த கொடூரமான காரியத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்தினார். குடிக்கக் கூடாது என்பது ஆபிரகாம் லிங்கனின் கொள்கையாக இருந்தது. அவர் அமெரிக்காவில் மது விலக்கைக் கொண்டு வந்தார். ஆபிரகாம் லிங்கனுடைய கொள்கையை பிரன்ஹாம் அந்த ஆசிரியர் மூலமாக கேட்டபோது, அது அவருக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது.

ஆனால் அவருடைய தகப்பனாரோ குடிகாரராக இருக்கிறார். இப்பொழுது அவர் பள்ளிக்குப் போகும்போது அவருக்கு சரியான ஆடை இல்லாததினாலும், பணவசதி இல்லாததினாலும் பிள்ளைகள் எல்லாம் அவரை பரியாசம் பண்ணு கிறார்கள். பிரன்ஹாமை மிகவும் அற்பமாக பார்த்தார்கள். பள்ளிக்குப் போனாலே அந்த பிள்ளைகளுடைய போராட்டத்தை சகிக்க முடியவில்லை. ஆனாலும் பள்ளியில் படிக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது.

ஒரு நாள் அவர் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அன்று வீட்டுக்கு வரும்போது அவரோடு கூட படித்த ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டே வந்து கொண்டிருந்தார். இவ்வாறு பேசிக் கொண்டே வரும்போது 5 பேர் அதை பார்த்தார்கள். அந்த 5 பேரும், “இவன் கென்டக்கியை சேர்ந்தவன். மலை ஜாதியைச் சேர்ந்தவன். படிப்பறிவில்லாதவன். குடும்பம் மிகவும் ஏழை. நாகரீகம் இல்லாதவர்கள். இவ்வாறு இருக்கையில் எப்படி அந்த பெண்ணிடம் பேசிக் கொண்டு வரலாம்” என்று சொல்லிக்கொண்டு அந்த பையன்கள் இவரைப் பிடித்து அடி அடி என்று அடித்து எழும்ப முடியாதபடிக்குச் செய்து விட்டார்கள்.

“நான் ஒரு இடமும் போக மாட்டேன். நான் பேசாமல் வீட்டைப் பார்த்துப் போய் விடுவேன்” என்று சொன்னாலும் கேட்கவில்லை. “நான் யாருடனும் சேர மாட்டேன். யார் கூடேயும் நான் ஐக்கியம் வைக்கப் போவது இல்லை” என்று சொன்னாலும் அவர்கள் அவரை விடாதபடி கல்லை எடுத்து அவர் மேல் அடித்தார்கள். அதனால் அவர் மிகவும் காயப்பட்டார். கடைசியில் அவரை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

அவர் நேராக வீட்டுக்குப் போனார். வீட்டுக்கு போய் வீட்டில் இருந்த .22 ரக துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வேக வேகமாக வந்தார். “இப்போதும் அந்த பையன்கள் வீட்டுக்கு போயிருக்க மாட்டார்கள். இந்த இடம் வழியாகத்தான் வருவார்கள்” என்று சொல்லி வேகமாக துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்து அவர்களை சுடும்படி வந்து விட்டார். அவர்கள் ஐந்து பேரும் வருவதைக் கண்டு, அவர்களைச் சுடும்படி துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பினார். பிறகு அவர்கள் 5 பேரையும் பார்த்து, “யார் முதலாவது சாகிறீர்கள், சொல்லுங்கள்?” என்றார். “உங்கள் 5 பேரையும் நான் சுட்டுக் கொல்லப் போகிறேன். யார் முதலாவது சாகிறீர்கள்? முதலாவது சாகப் போகிறவர்கள் வாருங்கள்” என்று சொல்லி துப்பாக்கியை நேராக நீட்டும்போது, 5 பேரும், “எங்களை விட்டு விடு” என்று கெஞ்சி கேட்டார்கள்.

“நாங்கள் இனிமேல் உன்னை ஒன்றும் செய்ய மாட்டோம்” என்று கெஞ்சி கேட்ட போதும் அவர் விடவில்லை. “இல்லை, நான் உங்களை சுட்டுக் கொல்லத்தான் போகிறேன். யார் முதலாவது வருகிறீர்கள்” என்று கேட்டார். அவர்கள் எல்லாரும் பயந்து ஓட ஆரம்பித்தார்கள். அவர் முதலாவதாக ஒருவன் மேல் சுட்டார். அப்படி சுடும் போது துப்பாக்கியில் இருந்து குண்டு வெளியில்

வரவில்லை. குண்டு வெடிக்கவில்லை. துப்பாக்கியை கழற்றிப் பார்க்கிறார். எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது. திரும்பவும் சுடுகிறார். 5 பேர் மேலும் சுட்ட பொழுதும், ஒரு குண்டும் வெடிக்கவில்லை. அதற்குள்ளாக 5 பேரும் தப்பி ஓடி விட்டார்கள். அவர்கள் ஓடிப் போன பிறகு துப்பாக்கியைச் சுட்டார். எல்லா குண்டுமே சரியாக வெடித்தது. அந்த நேரத்தில் வெடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? 5 பேருமே மரித்திருப்பார்கள். கர்த்தரோ அதை வெடிக்க வைக்கவில்லை.

தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்ய மாட்டான். (1 யோவான் 3:9) பாருங்கள். ஏனென்றால் அவருடைய வித்து அவனுக்குள் இருக்கிறது. பிரன்ஹாமுக்குள் என்ன இருக்கிறது? அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவர். அந்த வித்து அவருக்குள்ளே இருந்த காரணத்தால், "குடிக்க வேண்டும்" என்று நினைத்தாலும் முடியவில்லை. அவருக்கு குடிக்க விருப்பம் கிடையாது. மற்றவர்கள் நம்மை பரியாசம் பண்ணுகிறார்களே என்று குடிக்க நினைத்தாலும் ஆண்டவர் அதை தடை செய்து விட்டார். இப்போது அவர்களை சுட்டிருந்தால், கொலைக்காரனாக மாறியிருப்பார். ஆனால் அவர்களைச் சுடும்போது ஆண்டவர் அந்தக் குண்டை வெடிக்காதபடிச் செய்தார். 5 குண்டும் வெடிக்கவில்லை. அதன் பின்பு அவர்கள் போன பிறகு குண்டு வெடித்தது. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்ய மாட்டான். ஏன்னெறால் அவருடைய வித்து அவனுக்குள் தரித்து இருக்கிறது.

பிரன்ஹாம் சுட விரும்பவில்லை. எந்த வித புறம்பான பாவத்தையும் அவர் செய்யவில்லை. அவர் செய்யவில்லையா? அவருக்கு செய்ய விருப்பம் கிடையாது தான். அவர் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் கர்த்தர் விடவில்லை. கர்த்தர் தடை பண்ணிவிட்டார். ஏனென்றால் அவர் மூலமாக ஒரு பரிசுத்தமான செய்தி வரப் போகிறது.

தேவன் நம்மை தெரிந்து கொண்டால் நம்முடைய பாத்திரத்தை அவர் பரிசுத்தப்படுத்துவார். நாம் புறம்பான பாவத்தில் விழாதபடி ஆண்டவர் நம்மை பாதுகாப்பார். எத்தனை பேர் அதை விசுவாசிக்கிறோம்?

இவ்வளவு நேரம் பிரன்ஹாமுடைய வாழ்க்கையைக் குறித்துப் பார்த்தோம். இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையைப் பார்ப்போமானால், அவர் பிறக்கும் போது அங்கே பிறப்பதற்கு ஒரு இடமும் இல்லை. "குழந்தையை கந்தையில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்." இயேசு கிறிஸ்து ஒரு வைரமாக இருந்தார். அவர் ஒரு விலையேறப் பெற்றவர். அவர் பிறக்கும் போது ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். குழந்தை பிறக்க கூட இடமில்லை. அவர் மாட்டுத் தொழுவத்திலேயே பிறந்தார். குழந்தையை சுற்றுவதற்கு துணி கிடையாது. கந்தையில் சுற்றி வைத்தார்கள்.

அதைப்போல் பிரன்ஹாமின் பிறப்பு மிகவும் எளிமையாக இருந்தது. அவர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் என்பதைப் பார்த்தோம். அவர் பள்ளிக்குப் போனார். அங்கே பரியாசம் பண்ணப்பட்டார். சரியான சாப்பாடு இல்லை. உடுக்க சரியான ஆடை இல்லை. அவர்கள் பெற்றோர் நிறைய பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஒன்றையும் சரியாக பராமரிக்க முடியவில்லை. ஆகாரம் இல்லை. பெற்றோர் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்க முடியவில்லை. அவர்கள் அப்பாவுக்கு சம்பளம் மிகவும் குறைவு. அது மாத்திரம் அல்ல. அவர் விஸ்கி தயாரிக்கிறார்.

இப்படியெல்லாம் இருக்கும்போது, அவரோடு கூட படித்த பையன்கள் இவரிடம் பேச மாட்டார்கள். மிகவும் அற்பமாக எண்ணுகிறார்கள். அவர் ஏழையாக இருந்தார். நாகரீகம் இல்லாதவர். பள்ளியில் யாரிடமும் பேச முடியவில்லை. எல்லாரும் அவரைத் தனிமைப்படுத்துகிறார்கள். இனிமேல் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று தீர்மானித்து, 7ம் வகுப்போடு படிப்பை முடித்துக் கொண்டார். அதோடு அவர் படிப்பு முடிந்தது.

இயேசு கிறிஸ்து ஒரு விலையேறப்பெற்ற வைரமாக இருந்தார். அவர் வானத்தையும் பூமியையும் படைத்தவர். ஆனால் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். ஏரோதின் அரண்மனையில் பிறக்கவில்லை. பிரதான ஆசாரியன் வீட்டில் பிறக்கவில்லை. அதைப்போல் சகோ. பிரன்ஹாமை ஆண்டவர் ஒரு விசேஷித்த மனிதனாகத் தெரிந்துகொண்டார்.

ஆண்டவர் அவரை எங்கே பிறக்க வைக்கிறார்? மலைப் பிரதேசத்தில் இருந்த ஒரு எளிமையான மரக்கொட்டிலில்.

தென் ஆப்பிரிக்காவில் வைரம் எடுக்கிறார்கள். பூமியின் உள்ளே பல கிலோ மீட்டர் ஆழத்தில் தான் வைரம் இருக்கும். அந்த வைரமானது அதிக வெப்பத்திலும் உருகாமல் இருக்கிறது. அதை வெளியில் கொண்டு வந்து பட்டை தீட்டும்போது அந்த வைரமானது கோடிக்கணக்கான ரூபாய்க்கு விலை போகிறது.

அந்த வெப்பத்தையும் அழுத்தத்தையும் தாக்குப் பிடிக்கிறது. அது தாக்கு பிடித்தால் உண்மையான வைரமென்று அறிந்து கொள்ளலாம். அதை பட்டைத் தீட்டும்போது 7 வண்ணங்களைப் பிரதிபலிக்கிறது. இருட்டில் வைத்தாலும் அது பிரகாசிக்கிறது. அதைப்போல் பிரன்ஹாமுக்கு ஆண்டவர் அவ்வளவு வெப்பமும் அவ்வளவு அழுத்தமும் கொடுத்தார். அவ்விதமான ஒரு நிலைமைக்கு வந்து தான் அவரை ஆண்டவர் ஒரு வைரமாக மாற்றினார்.

அதைப்போலவே நமக்கு வருகிற கஷ்டங்கள் நமக்கு வருகிற அழுத்தங்கள் ஆகியவற்றை பிரன்ஹாமின் ஜீவியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நீங்கள் யாருமே அவ்விதமான சூழ்நிலையில் இல்லை.

அதெல்லாம் அவர் தாக்குப் பிடித்ததினால் தான் அவர் வைரமாக மாறினார். அவ்வளவு வேதனையில் இருந்து அந்த மனிதனை ஆண்டவர் தெரிந்து கொண்டார். அவ்விதமான குடும்பத்தைத் தெரிந்துகொண்டார்.

பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பிரன்ஹாமுடைய வாழ்க்கையை பற்றி நமக்கு தெரிந்தால் தான் இந்த செய்தியில் இன்னும் அதிகமாக விசுவாசம் வைப்பதற்கும், மற்றவர்களுக்கு ஆணித்தரமாக சொல்வதற்கும் நமக்கு அது பிரயோஜனமாக இருக்கும்.

நம்முடைய வாழ்க்கையில் பல சோதனைகள் வருகிறது என்றால் அது நம்மை ஒரு விலையேறப்பெற்ற வைரமாக மாற்றுவதற்குத்தான். சகோ. பிரன்ஹாம் ஒரு மகத்தான தீர்க்கத்தரிசி. உலகத்திலேயே மகத்தான ஒரு தீர்க்கத்தரிசியாக தேவன் அவரை பயன்படுத்தினார். இன்றைக்கு அவருடைய செய்தி நம்மிடம் உள்ளது.

அவருடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது எவ்வளவு பயங்கரமாக உள்ளது? அவருடைய தாயார் எவ்வளவு கடினமான சூழ்நிலைகளை சந்தித்திருக்கிறார் என்றும் அத்தனை குழந்தைகளையும் எப்படி வளர்த்திருக்கிறார்கள் என்றும் எவ்வளவு பொறுமையில் இருந்திருக்கிறார்கள் என்றும் நினைக்கும்பொழுது நம்முடைய உள்ளமானது அப்படியே நெகிழ்ந்து போகிறது. கர்த்தர் அவ்விதமான ஒரு சூழ்நிலையிலிருந்து தான் தீர்க்கதரிசியை தெரிந்துகொண்டார். அவருடைய செய்தி உலகெங்கும் போகும்படியாக செய்து, அவருக்காக ஒரு மணவாட்டியை அந்த செய்தியின் மூலம் ஆயத்தப்படுத்துகிறார். நாம் அந்த செய்தியிலே மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

# ஜெபம்

எங்களை நேசிக்கிற ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். தீர்க்கதரிசியின் மூலமாய் இந்த செய்தியை எங்களுக்குக் கொடுத்தீர். அவருடைய வாழ்க்கையைக் குறித்து நாங்கள் தியானித்தோம். அவர் எப்படி பிறந்தார் என்றும், அவர் பிறக்கும் பொழுது என்ன சூழ்நிலையில் இருந்தார் என்றும், அவர் சிறுவனாய் இருக்கும்போது என்ன சூழ்நிலைகளை எல்லாம் சந்தித்தார் என்றும் அவருடைய குடும்பச் சூழ்நிலை என்ன என்பதைக் குறித்தும் நாங்கள் இவ்வளவு நேரமும் தியானித்தோம்.

இயேசுவே, நீர் அவரோடு கூட எப்படி இடைபட்டீர் என்றும் அந்த பரிசுத்தவானுடைய வாழ்க்கையானது எங்களுக்கு ஒரு அடிச்சுவடாக இருக்கிறது என்றும், நாங்கள் அதைப் பின்பற்றி வந்து எல்லா சூழ்நிலைகளையும் சந்தித்து, இந்த உலகத்திலே எங்கள் வாழ்க்கையிலே உள்ள சூழ்நிலைகளை நாங்கள் ஜெயித்து ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள கொள்ள இது எங்களுக்கு ஒரு உதாரணமாய் இருக்கட்டும்.

ஆண்டவரே, இந்தக் கடைசி காலத்தில் எங்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை நீர் அனுப்பியிருக்கிறீர். அந்த தீர்க்கதரிசிக்காக நன்றி செலுத்துகிறோம். ஆண்டவரே, அதற்காக நன்றி செலுத்துகிறோம். அந்தச் செய்தியை நாங்கள் தியானிக்க எங்களுக்கு கிருபை தந்தீரே! அநேகருக்கு அந்த செய்தி கிடைக்கவில்லை. அது கிடைத்தாலும் சிலருக்கு அது வெளிப்படவில்லை. ஆண்டவரே, அந்த மகத்துவத்தை நாங்கள் ஆராய்ச்சி செய்யும்படியாகச் செய்திருக்கிறீர்.

கர்த்தாவே, நாங்கள் எல்லா சூழ்நிலைகளையும் ஜெயிக்க எங்களுக்கு கிருபை தருவீராக. மணவாட்டியை ஆயத்தப்படுத்தும்படியாக அவரை நீர் அனுப்பியிருக்கும் பொழுது, அந்தச் செய்தியை நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆண்டவரே, அவருடைய வாழ்க்கையை நாங்கள் பார்த்து, உம்மைத் துதிக்கிறோம். இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் வாழ்க்கையிலும் நீர் இடைபடுவீராக. எங்களுடைய சூழ்நிலையை நீர் மாற்றுவீராக. எங்களை நீர் விலையேறப்பெற்ற வைரமாக மாற்றும்.

எங்களுக்கு வருகின்ற சோதனைகளும், எங்களுக்கு வருகின்ற சூழ்நிலைகளும் எங்களை வைரமாக மாற்றட்டும். அது நன்மைக்கேதுவாக முடியட்டும். சகோ. பிரன்ஹாமை நீர் எளிமையிலிருந்து எடுத்து, புறஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக நீர் அவரை உயர்த்தினீர். ஆண்டவரே, அவர் மூலமாக பெரிய காரியங்களைச் செய்து, உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினீர். எங்களையும் நீர் பயன்படுத்தும். எங்களை உமது சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம். பிரன்ஹாம் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார். அவர் பாதுகாக்கவில்லை. நீர் அவரை பாதுகாத்தீர். ஏனென்றால் அவர் மூலமாக ஒரு செய்தி வர வேண்டியிருந்தது.

ஆண்டவரே, அதைப்போல எங்கள் மூலமாக இந்த கடைசி கால செய்தி போக வேண்டும். எங்களை நீர் பாதுகாத்துக் கொள்ளும். கர்த்தாவே, இரக்கமாயிரும். இந்த வார்த்தைகளைக் கேட்ட எல்லாரையும் ஆசீர்வதியும். அதோடு அவர்கள் ஜெப விண்ணப்பங்களுக்குப் பதில் அளிப்பீராக, சரீரத்தை தொடுவீராக, பாதுகாத்து கொள்வீராக. மறுபடியும் நாங்கள் சந்திக்க கிருபை தாரும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே வேண்டுகிறோம். ஆமென்.

★★★★★

மேலும் சத்தியத்தை விபரமாக அறிய விரும்பினால் www.calvarytabernacle.in என்ற எங்கள் சபை இணையதளத்தில் (website) கர்த்தருடைய வெளிப்பாடான வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

## முகவரி


*கல்வாரி சபை*

*10, கலைஞர் தெரு*

*வளசரவாக்கம்*

*சென்னை - 600 087*

*தொலைபேசி: +91 9884720958*

samuelappadurai@gmail.com

www.calvarytabernacle.in